காலம் தவற்றைத் திருத்திவிடும் என நம்பினேன். ஒரு நாளோ, ஒரு வாரமோ தான் நான் கடுஞ்சிறையில் கொடுமைப்பட வேண்டியிருக்கும் என் எண்ணினேன். ஆனால் விதி தன் தவற்றையுணர இவ்வளவு காலத்தை எடுத்துக் கொண்டது. இப்போது ஏன் இவ்வளவு மூச்சுவிடாமல் மரியாதையும் அடக்கமும் இல்லாமல் பேசுகிறேன் என்றால், என்னைக் காலாகாலத்துக்கும் பிறர் தூற்ற வழிசெய்து விடாதீர்கள் என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளவே தான்! என் மீது எழுந்த குற்றச்சாட்டை நீக்க மீண்டும் மன்றம் கூட்டுங்கள் மன்னரே என்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றான் வந்தியத்தேவன்.

பழுவேட்டரையரும், மன்னர் மதுராந்தக சோழ தேவரும் மட்டுமிருந்த அந்தக் கூடத்தில் வந்தியத்தேவன் குரல் சன்னமாக ஒலித்தாலும், அதிலே அழுத்தமும் கம்பீரமும் இருந்தன. மதுராந்தகர் கண்களில் நீர் தளும்பி நின்றது. சமீப காலமாக அவர் அடிக்கடி உணர்ச்சிவசப்பட்டுவிடுகிறார். அவர் உடலில் அடிக்கடி ரோமாஞ்சலி ஏற்பட்டு வந்தது. அவர் நாடியும் நரம்பும் அடிக்கடி துடிதுடித்து அவர் இதயத்தை என்னவோ செய்தது. அவரது உடலில் பாயும் குருதி சட்டெனத் துள்ளித்துள்ளி ஓடுவது போன்று ஒரு சமயம் தோன்றும். ஒரு சமயம் பாலை நிலத்தில் செல்வது போன்ற உணர்ச்சியை அது எழுப்பும்; ஒரு சமயம் குற்றாலச்சாரலில் மஞ்சு கொஞ்சி நிற்கும் மலை மீது உலவுவது போல் தோன்றும். தன்னை நாடி வருபவர்கள் மீது ஒரு சமயம் அன்பு கனிந்து நிற்கும். ஒரு சமயம் கடுமையும், சீற்றமும், எரிச்சலும் பொங்கி நிற்கும். ஒரு சமயம் முடங்கிக் கிடந்த கால்கள் இரும்பு போன்று உறுதியுடன் கூடியதாக மாறும். ஒரு சமயம் கால்களே இல்லாது போய்விட்டனவோ என்று